# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/45 - 2023 ජුනි මස 14 වැනි බදාදා - 2021.06.14

*2336/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 6 ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, யூன் 14.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் “ **2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்**” என அழைக்கப்படும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2023 ஆம் ஆண்டின் விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர ஒழுங்கு விதிகளின் இலக்கம் 01, திருத்தம் செய்யப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி இலக்கம் 2312/77 இன் மூலம் திருத்தி அமைக்கப்படுகின்றது.

3. மேலே குறிப்படப்பட்ட 2023 ஆம் ஆண்டின் விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர ஒழுங்கு விதிகளின் இலக்கம் 01 இன் **அட்டவணை I** இல் கீழ்க் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட குறிப்புக்கள் இதன் மூலம் உள்ளடக்கப்படுகின்றன.

| | *I ஆவது நிரல்* **தலைப்பு இலக்கம்** | *II ஆவது நிரல்* **ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | | *III ஆவது* **நிரல் விபரம்** | *IV ஆவது நிரல்* **இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (ICL)** |
|---|---|---|---|---|---|
| 239 | **11.01** | | | **கோதுமை மாவு அல்லது மெஸ்லின் மாவு** | |
| | | 1101.00.10 | --- | கோதுமை மாவுடைய | **L** |

4. மேலே ஒழுங்குவிதி இலக்கம் 03 இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டவை, கீழ்வரும் சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தின் (ICL) கீழ் சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது:

(அ) பொருட்கள், 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஏற்றுப் பொருளூண்டியல் ரசீது மூலம் கப்பலேற்றப்பட்டவை மற்றும் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் வந்தடைந்தவை.

(ஆ) பொருட்கள், 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட்ட கடனட்டைக் கடிதம் (LC) அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டவை மற்றும் இவ் ஒழுங்கு விதிகளின் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் வந்தடைந்தவை.

(இ) பொருட்கள், 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முற்கொடுப்பனவு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டவை மற்றும் இவ் ஒழுங்கு விதிகளின் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் வந்தடைந்தவை.

5. இவ் ஒழுங்கு விதிகள் வினைதிறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதனை முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் இலங்கைச் சுங்கம் மற்றும் அனுமதிப் பத்திரதாரர் வங்கிக்குத் தேவையான "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்படுகின்றது.

6. இவ் ஒழுங்கு விதிகள் தொடர்பாக எழுகின்ற எந்த பிரச்சினை தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

7. இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம், கீழ்க் காணப்படும் பொருட்களின் வகையில் செலுத்தப்படுவதற்கும், திருத்தம் செய்யப்பட்ட, விஷேட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம் ஆனது பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் I ஆவது அட்டவணைக்கு இத்தால் உள்ளடக்கப்படுகின்றது.

| *தொடர் இலக்கம்* | *பொருட்கள்* | *இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரக் கட்டணம்* |
|---|---|---|
| 88 | கோதுமை மாவு | வி.அ.க. (CIF) பெறுமதியில் 0.1% |

EOG 06-0181

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.